**ஜூலை – 19**

# TNPSC துளிகள்

- தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு, தொழிலாளர் பங்கேற்பு, திறன் மேம்பாடு மற்றும் தொழிலாளர்களுக்கான டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் குறித்து விவாதிக்க தொழிலாளர்கள் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர்களின் 12வது பிரிக்ஸ் மாநாட்டை (LEMM) 2026 ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் தலைமையின் கீழ் இந்தியா ஹைதராபாத்தில் நடத்தியது.
  - இதன் கருத்துரு "Building for Resilience, Innovation, Cooperation and Sustainability (BRICS)" என்பதாகும்.
- இலங்கை, மொரட்டுவாவில் நடைபெற்ற முதலாவது மகளிர் T20I காது கேளாதோர் கிரிக்கெட் தொடரில், இந்தியக் காது கேளாத மகளிர் கிரிக்கெட் அணி இலங்கையை 5–0 என்ற கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது.
- இந்தியா முழுவதும் உள்ள சுமார் 15,000 புனிதக் காடுகளைப் பாதுகாப்பதற்கும் மீட்டெடுப்பதற்கும் தேசிய ஈடுசெய் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை மற்றும் திட்டமிடல் ஆணையம் (CAMPA) 'ஆஸ்தா வன சம்ரக்ஷன் யோஜனா' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
  - இத்திட்டம் 2026-27 முதல் 2030-31 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு ₹3,000 கோடி ஒதுக்கீட்டைக் கொண்டுள்ள நிலையில் மேலும், இது சமூகம் சார்ந்த பாதுகாப்பு, பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் பருவநிலை மீள்திறன் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.
- 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நியூசிலாந்திற்குச் சென்ற பிரதமர் நரேந்திர மோடிக்கு பாரம்பரியமான 'மாவோரி போவ்ஹிரி' (Māori Pōwhiri) முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.
  - 'மாவோரி போவ்ஹிரி' என்பது நியூசிலாந்தின் பூர்வீக பாலினேசிய மக்களான மாவோரி மக்களின் பாரம்பரிய வரவேற்பு விழாவாகும்.
- இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டை ஊக்குவிக்கவும், வேலைவாய்ப்புகளை மேம்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 15 அன்று உலக இளைஞர்கள் திறன் தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Skills for a shared future" என்பதாகும்.
- பாம்புகள், அவற்றின் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளில் அவற்றின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 16 அன்று உலகப் பாம்புகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Respect, Don't Fear: Protecting Nature's Silent Guardians" என்பதாகும்.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான சுய-கணக்கெடுப்பு

- மக்கள் தொகை கணக்கெடுப்புப் பயிற்சியின் முதல் கட்டமாக, 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான சுய-கணக்கெடுப்புச் செயல்முறை தமிழ்நாட்டில் 2026 ஆம் ஆண்டு ஜூலை 17 அன்று தொடங்கியது.
- 16 மொழிகளில் கிடைக்கும் அதிகாரப்பூர்வ மக்கள் தொகை சுய-கணக்கெடுப்பு

இணையதளம் மூலம் குடிமக்கள் தங்களது குடும்ப விவரங்களை தாங்களே பதிவு செய்யலாம்.

- இந்த சுய-கணக்கெடுப்பு வசதி 2026 ஆம் ஆண்டு ஜூலை 17 முதல் ஜூலை 31 வரை செயல்படும் என்பதுடன் மேலும் விவரங்களை சமர்ப்பித்த பிறகு குடிமக்கள் தனித்துவமான சுய-கணக்கெடுப்பு அடையாள எண்ணைப் (ID) பெறுவார்கள்.
- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 முதல் ஆகஸ்ட் 30 வரை திட்டமிடப்பட்டுள்ள வீடுகள் பட்டியல் மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பின் போது, மக்கள் தங்களது சுய-கணக்கெடுப்பு அடையாள எண்ணை கணக்கெடுப்பு அதிகாரிகளிடம் பகிர்ந்து கொள்ளலாம்.
- 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு முதன்முறையாக டிஜிட்டல் வடிவத்தில் நடத்தப்படவுள்ளது என்பதோடு கணக்கெடுப்பாளர்கள் தரவுகளைச் சேகரித்து நேரடியாக சேவையகங்களில் பதிவேற்ற அலைபேசி செயலிகளைப் பயன்படுத்துவார்கள்.




## மறைமலை அடிகளாரின் 150வது பிறந்தநாள் விழா

- தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு மறைமலை அடிகளார் ஆற்றிய பங்களிப்பை நினைவுகூரும் வகையில், அவரது 150வது பிறந்தநாள் 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தமிழ்நாட்டில் கொண்டாடப்பட்டது.
- மறைமலை அடிகளார் (1876–1950) ஒரு தமிழறிஞர், எழுத்தாளர் மற்றும் தனித்தமிழ் இயக்கத்தை நிறுவியவர் ஆவார்.
- இவர் 1876 ஆம் ஆண்டில் வேதாசலம் என்ற பெயரில் பிறந்தார், பின்னர் தூய தமிழ் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக 1916 ஆம் ஆண்டில் 'மறைமலை அடிகளார்' என்று தனது பெயரை மாற்றிக் கொண்டார்.
- மெட்ராஸ் கிறித்துவக் கல்லூரியில் 11 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர், சங்க இலக்கியம், தமிழ் இலக்கணம் மற்றும் சைவ சித்தாந்தம் ஆகியவற்றில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பங்களித்துள்ளார்.
- சமஸ்கிருதம் கலந்த வார்த்தைகளின் பயன்பாட்டைக் குறைத்து, தமிழ் அடையாளத்தை வலுப்படுத்துவதன் மூலம் தமிழ் சொற்களஞ்சியத்தை மேம்படுத்துவதை தனித்தமிழ் இயக்கம் நோக்கமாகக் கொண்டிருந்தது.
- ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதத்திலும் புலமை பெற்றிருந்த இவர், தமிழின்


வளத்தையும் முக்கியத்துவத்தையும் நிரூபிக்க மேற்கண்ட இந்த மொழிகளைப் பயன்படுத்தினார்.

- சென்னைக் கன்னிமரா பொது நூலக வளாகத்தில் அமைந்துள்ள மறைமலை அடிகளார் நூலகமானது அவரது புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சிப் பொருட்களைப் பாதுகாத்து வருகிறது.




# தேசியச் செய்திகள்

## தேசியப் பாடலுக்கான முன்னுரிமை விதி





- அரசு நிகழ்ச்சிகளில் தேசிய கீதமான 'ஜன கண மன' பாடுவதற்கு அல்லது இசைக்கப் படுவதற்கு முன்பாக, தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' இசைக்கப் படுவதை அல்லது பாடப்படுவதை உறுதி செய்யுமாறு மாநிலங்கள் மற்றும் மத்திய அமைச்சகங்களுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) உத்தரவிட்டுள்ளது.
- இரண்டு தேசியச் சின்னங்களான தேசிய கீதம் மற்றும் தேசிய பாடலுக்கு சரியான உரை, வரி வடிவம் மற்றும் உச்சரிப்பு பின்பற்றப்பட வேண்டும் என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 'வந்தே மாதரம்' பாடல் பங்கிம் சந்திர சட்டர்ஜியால் எழுதப்பட்டு, 1880களில் (1882) அவரது 'ஆனந்தமடம்' என்ற நாவலுடன் வெளியிடப்பட்டது.
- 1937 ஆம் ஆண்டில், இந்திய தேசிய காங்கிரஸ் தனது கூட்டங்களில் 'வந்தே மாதரம்'

பாடலின் முதல் இரண்டு பத்திகளைப் பயன்படுத்த முடிவு செய்தது.

- ❖ இந்திய அரசியலமைப்பு 'வந்தே மாதரம்' பாடலுக்கு தேசியப் பாடல் அந்தஸ்தை வழங்கியுள்ள அதே சமயம் ரவீந்திரநாத் தாகூரால் எழுதப்பட்டு இசையமைக்கப் பட்ட 'ஜன கண மன' தேசிய கீதமாகும்.
- ❖ வந்தே மாதரம் பாடுவதற்கு இடையூறு ஏற்படுத்துவது அல்லது அவமதிப்பது ஆகியவற்றைத் தண்டனைக்குரிய குற்றமாக மாற்றுவதற்காக வேண்டி தேசியச் சின்னங்களை அவமதிப்பதைத் தடுக்கும் சட்டம், 1971-இல் திருத்தம் செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## பிரிக்ஸ் தரநிலைப் படுத்தல் கூட்டம்




- ❖ 2026 ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் தலைமையின் கீழ் பிரிக்ஸ் தேசிய தரநிலை அமைப்புகளின் (NSBs) தலைவர்களின் 5வது கூட்டத்தை இந்தியா பெங்களூரில் நடத்தியது.
- ❖ பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே தரநிலைப்படுத்தலில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது மற்றும் தரநிலைப்படுத்தல் தொடர்பான பிரிக்ஸ் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (MoU) இறுதி செய்வது ஆகியவற்றுக்கு இந்தக் கூட்டம் முக்கியத்துவம் அளித்தது.
- ❖ உறுப்பு நாடுகளிடையே தகவல் பகிர்வு, சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக் கொள்ளுதல், தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை ஊக்குவிப்பதை இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தியாவின் தேசியத் தர அமைப்பான இந்தியத் தர நிர்ணய அமைப்பானது (BIS) நாட்டின் தரநிலைப்படுத்தல் நடவடிக்கைகளை நிர்வகிக்கிறது.
- ❖ பிரேசில், சீனா, எகிப்து, எத்தியோப்பியா, இந்தியா, இந்தோனேசியா, ஈரான், ரஷ்யா, சவுதி அரேபியா, தென்னாப்பிரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆகிய நாடுகள் பிரிக்ஸ் அமைப்பில் இடம்பெற்றுள்ளன.

## கருணைக் கொலை மசோதா - பிரான்ஸ்

- ❖ குணப்படுத்த முடியாத மற்றும் உயிருக்கு ஆபத்தான நோய்களால் பாதிக்கப்பட்ட

வயதுவந்தோர்களுக்கு கருணைக் கொலைக்கான சட்டப்பூர்வ உரிமையை உருவாக்கும் மசோதாவிற்கு பிரான்ஸ் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

- தகுதியான நோயாளிகள் கடுமையான நிபந்தனைகளின் கீழ் உயிரைப் பறிக்கும் மருந்தைப் பெற இது அனுமதிப்பதுடன் இதனை அவர்கள் தாங்களாகவே செலுத்திக் கொள்ளலாம் அல்லது தேவைப்பட்டால் மருத்துவர் அல்லது செவிலியர் மூலம் செலுத்திக் கொள்ளலாம்.
- கடுமையான உடல் அல்லது உளவியல் ரீதியான துன்பங்களுடன் குணப்படுத்த முடியாத நோய்களால் அவதிப்படும், பிரெஞ்சுக் குடிமக்கள் அல்லது சட்டப்பூர்வமாக வசிக்கும் வயதுவந்தோர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தும்.
- மருத்துவ மதிப்பீடு, குறிப்பிட்ட சிந்தனைக்கான கால அவகாசத்திற்குப் பிறகு கோரிக்கையை உறுதிப்படுத்துதல் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் இதில் ஈடுபடுவதிலிருந்து விலகிக்கொள்ள அனுமதிப்பது போன்ற பாதுகாப்பு அம்சங்கள் இந்த மசோதாவில் உள்ளன.
- இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்பு பிரான்சின் அரசியலமைப்பு சபையால் மதிப்பாய்வு செய்யப்படலாம்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## வனவிலங்குப் பாதுகாப்புத் திட்டங்கள் - தேசிய CAMPA


- தேசிய CAMPA தனது 7வது ஆட்சிக்குழு கூட்டத்தில் நதி ஓங்கில்கள் (டால்பின்கள்), பனிச் சிறுத்தைகள், காட்டெருமைகள் மற்றும் இந்தியக் காண்டாமிருகங்கள் ஆகியவற்றுக்கான நான்கு புதிய பாதுகாப்புத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தது.
- தெற்காசிய நதி ஓங்கிலின் IUCN செந்நிறப் பட்டியலின் நிலையானது அருகி வரும் இனமாக உள்ளது; இந்த இனப் பாதுகாப்பிற்கான பாதுகாப்பு மற்றும் மீட்பு செயல் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- பனிச்சிறுத்தையின் IUCN செந்நிறப் பட்டியலின் நிலையானது எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனமாக உள்ளது; இதன் எண்ணிக்கையை மதிப்பிடும் இரண்டாவது சுழற்சியுடன் பனிச் சிறுத்தை பாதுகாப்புத் திட்டத்தின் கட்டம்-II-க்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.
- காட்டெருமையின் IUCN செந்நிறப் பட்டியலின் நிலையானது அருகி வரும் இனமாக உள்ளது; நீண்ட காலப் பாதுகாப்பிற்காக அகில இந்தியப் பாதுகாப்பு வியூகத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- இந்தியக் காண்டாமிருகம் (ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம்) IUCN செந்நிறப் பட்டியலின் நிலையானது எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனமாக உள்ளது; இந்த இனத்தை மீட்பதற்கான பாதுகாப்பு செயல் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.




## மாநிலச் செய்திகள்

### லகன்பூர் தெருவோர உணவகம் - PM SVANidhi திட்டம்




- ஒழுங்கமைக்கப்பட்ட தெருவோர உணவு வசதியை மேம்படுத்துவதற்காக 'பிரதான் மந்திரி ஸ்வநிதி தெருவோர உணவு மையத் திட்டத்தின்' கீழ் முதற்கட்டமாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட நகரங்களில் ஜம்மு காஷ்மீரின் கதுவா மாவட்டத்தில் உள்ள லகன்பூரும் ஒன்றாகும்.
- இந்த முன்னெடுப்பானது மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் (MoHUA) 'பிரதான் மந்திரி தெருவோர வியாபாரிகளின் ஆத்மநிர்பார் நிதி' (PM SVANidhi) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.
- நவீன விற்பனை உள்கட்டமைப்பு, சுகாதாரமான உணவு இடங்கள் மற்றும் தெருவோர வியாபாரிகளுக்கு சிறந்த வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதை இந்தத் தெருவோர உணவு மையம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- லகன்பூர் ஜம்மு காஷ்மீரின் கதுவா மாவட்டத்தில் அமைந்துள்ளதுடன் இது

பஞ்சாபிலிருந்து ஒன்றியப் பிரதேசத்திற்குள் நுழையும் முக்கிய நுழைவாயிலாகச் செயல்படுகிறது.

- பிணையமற்ற செயல்பாட்டு மூலதனக் கடன்களை வழங்குவதற்காகவும், தெருவோர வியாபாரிகளின் நிதி உள்ளடக்கத்தை ஆதரிப்பதற்காகவும் வேண்டி 2020 ஆம் ஆண்டில் பிரதமரின் ஸ்வநிதி திட்டம் தொடங்கப் பட்டது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## மன்னத்து பத்மநாபன் நினைவிடம்





- சமூகச் சீர்திருத்தவாதியும் சுதந்திரப் போராட்ட வீரருமான மன்னத்து பத்மநாபனின் சிலையை குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார் மற்றும் புதுடெல்லியின் துவாரகாவில் மன்னம் ஸ்மிருதி மண்டபத்தையும் அவர் திறந்து வைத்தார்.
- அவரது பங்களிப்புகளைக் கௌரவிக்கும் வகையில், டெல்லியில் உள்ள நாயர் சேவை சங்கம் (NSS), மன்னம் சர்வதேச மையத்தில் இந்த நினைவிடத்தை அமைத்துள்ளது.
- மன்னத்து பத்மநாபன் (1878–1970) ஒரு முக்கிய சமூக சீர்திருத்தவாதி, சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் நாயர் சேவை சங்கத்தை (NSS) நிறுவியவர் ஆவார்.
- கேரளாவில் உள்ள நாயர் சமூகத்தினரிடையே கல்வி, சமூக நலம் மற்றும் தன்னம்பிக்கையை மேம்படுத்துவதற்காக 1914 ஆம் ஆண்டில் அவர் NSS ஐ நிறுவினார்.
- சமூக சீர்திருத்தம், ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல், கல்வி மேம்பாடு மற்றும் சமூக வளர்ச்சி ஆகியவற்றுக்காக அவர் பணியாற்றினார்.
- சமூகப் பாகுபாடு மற்றும் கோவில் சாலைகளுக்குச் செல்வதற்கான கட்டுப்பாடுகளுக்கு எதிரான முக்கிய இயக்கமான வைக்கம் சத்தியாகிரகத்தில் (1924-1925) அவர் பங்கேற்றார்.
- நாயர் சேவை சங்கத்தின் தலைவராகப் பணியாற்றிய அவர், கல்வி மற்றும் சமூக நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதில் முக்கியப் பங்காற்றினார்.

- அவர் "மன்னம்" என்று பிரபலமாக அழைக்கப்பட்டார் என்பதோடு மேலும் கேரளாவின் சமூக மறுமலர்ச்சியின் தலைவராக நினைவுகூரப்படுகிறார்.
- அவரது சுயசரிதையான “என்றே ஜீவித ஸ்மரணகள்” (எனது வாழ்க்கை நினைவுகள்) அவரது வாழ்க்கை மற்றும் சமூகப் பணிகள் குறித்த நுண்ணறிவுகளை வழங்குகிறது.

# முக்கிய தினங்கள்

## கல்வி வளர்ச்சி நாள் 2026 - ஜூலை 15

- காமராஜரின் பிறந்தநாளைச் சிறப்பிக்கும் வகையில் வேண்டி ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் இந்நாள் கொண்டாடப்படுகிறது.
- கல்வியின் முக்கியத்துவத்தை ஊக்குவிப்பது, பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிப்பது மற்றும் கல்வி வளர்ச்சிக்கு காமராஜர் ஆற்றிய பங்களிப்பைக் கௌரவிப்பது ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அனைத்துப் பள்ளிகளிலும் இந்த தினத்தைக் கொண்டாடுவது கட்டாயமாக்கப்பட்ட 'தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (அறிவிப்பு மற்றும் கொண்டாட்டம்) சட்டம், 2006' இயற்றப்பட்ட பிறகு, இந்நாள் 2006 ஆம் ஆண்டில் முதல்முறையாகக் கொண்டாடப் பட்டது.
- ஆயிரக்கணக்கான பள்ளிகளைத் திறப்பது, இலவசக் கல்வியை விரிவுபடுத்துவது மற்றும் பள்ளி இடைநிற்றலைக் குறைப்பதற்காக என்று மதிய உணவுத் திட்டத்தை வலுப்படுத்துவது போன்ற பெரிய கல்வி சீர்திருத்தங்களை காமராஜர் அறிமுகப் படுத்தினார்.
- கே. காமராஜர் 1954 ஆம் ஆண்டு முதல் 1963 ஆம் ஆண்டு வரை மெட்ராஸ் மாநிலத்தின் முதலமைச்சராகப் பணியாற்றினார் என்பதுடன் அவரது பல்வேறு கல்விச் சீர்திருத்தங்களுக்காக தமிழ்நாட்டின் "கல்வித் தந்தை" என்று பிரபலமாக அறியப் படுகிறார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★